**நுவரெலியா பிரதேச சபை**
**நுவரெலியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 25 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 மே 21 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 19 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நுவரெலியா பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துக் கணக்கின் இருப்பு, மூலதன ஈடுபாட்டு வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதிக்கு சமனாக இருக்க வேண்டிய போதிலும், அக் கணக்கு மீதிகளுக்கு இடையே ரூபா 21,742 வேறுபாடு காணப்படுகிறது. | கணக்கு ஒப்பிடப்பட்டு சீராக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |
| (ii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் மூலதன சொத்து புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு செலவு விடயத்தின் கீழ் ரூபா 75,000 கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந் போதிலும் உரிய கணக்கிற்கு வரவு பதிவு வைக்கப்படாமல் இருந்தமையால் ஆண்டின் செலவினம் அப் பெறுமானத்தில் குறைவாகக் காட்டப்பட்டிருப்பதுடன் கணக்கு சமப்படுத்தப்பட்ட விதம் தெளிவாக இருக்கிவில்லை. | கணக்கு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் செலுத்தப்பட வேண்டிய தொலைபேசிக் கட்டணம் ரூபா 22,000 கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந் போதிலும், உரிய செலவின விடயத்தில் ரூபா 97,000 என ரூபா 75,000 கூடுதலாக வரவு வைக்கப்பட்டுள்ளது. | கணக்கு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |
| (iv) | 19 ஆம் இலக்க நாட்குறிப்பு பதிவு மூலம் களஞ்சியசாலை கடன் கொடுத்தோர் ரூபா 19,292 வழங்கல் மற்றும் உபகரணங்கள் செலவின விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டு களஞ்சியசாலை் கடன் கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதும் அது 103 செலவு விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டாமையால் கணக்கு சமப்படுத்தப்பட்ட முறையில் தெளிவின்மை காணப்பட்டது. | கணக்கு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |
| (v) | 20 ஆம் இலக்க நாட்குறிப்பு பதிவு மூலம் வருடத்தின் களஞ்சியசாலை பண்டங்கள் வழங்கியமை ரூபா 1,066,694 வழங்கல் மற்றும் உபகரணங்கள் செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு உரிய இருப்புக் கணக்கிற்கு செலவிடப்பட்டதாக குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் செலவு கணக்கிற்கு ரூபா 409,858 மட்டுமே வரவு வைக்கப்பட்டு உரிய இருப்புக் கணக்கு ரூபா 1,066,694 ஆல் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் ஆண்டின் செலவினம் ரூபா 656,836 குறைவாக காட்டப்பட்டிருந்ததுடன் கணக்கு சமப்படுத்தப்பட்ட முறையில் தெளிவின்மை காணப்பட்டது. | கணக்கு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |
| (vi) | வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட முத்திரை வரி மற்றம் ரூபா 188,469 மற்றும் தேசத்தை கட்டியெழுப்புலுக்கான வரி ரூபா 120,454 வருமான செலவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருப்பதனால் ஆண்டின் வருமானம் ரூபா 308,923 கூடுதலாகவும் மீளச் செலுத்தப்பட வேண்டிய வைப்பு அப் பெறுமானத்தினால் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | கணக்கு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (vii) | இரண்டாவது வேலைத்திட்டத்தில் ஓய்வூதிய பணிக்கொடை செலவு ரூபா 31,049 வருமான செலவுக் கணக்கில் கணக்கு வைக்கப்படாமையினால் வருடத்தின் செலவு அப் பெறுமானத்தினால் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | கணக்கு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |
| (viii) | மீளாய்வாண்டின் இறுதியில் வியாபார அனுமதிப்பத்திர கட்டண நிலுவையான ரூபா 135,200 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |
| (ix) | சபைக்கு சொந்தமான டிரக்டர் டேலரின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த நிதி நிலைமைக் கூற்றில் காணப்படும் 03 கணக்கு மீதிகளின் பெறுமதி மற்றும் அக்கணக்கு மீதிகளுக்குரிய பயன்பாட்டிற்குரிய பதிவேடுகளுக்கு இடையே ரூபா 4,906,650 ஆன வேறுபாடு காணப்பட்டது. | இணக்கமின்மைகளை இணங்கண்டு சீராக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை. |

**(இ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 122,714,198 தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | பெறுமதகள உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை. |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு | சபையின் செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | 189 மற்றும் 486 | 2014 யூன் 02 ஆந் திகதிய ரூபா 100,800 பெறுமதியான மதிப்பிழந்த காசோலையின் பெறுமதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | மதிப்பிழந்த காசோலையின் பெறுமதி அறவிடப்பட வேண்டும். | இது தொடர்பாக உரிய நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் நுவரெலியா நிதிக் குற்றப் பிரிவிற்கு முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | பிரதேச சபையின் (நிதி மற்றும் நிர்வாக) விதி 218 | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடம் என்பன மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதி விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ஈ) | உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| (i) | 1988 மே 17 ஆம் திகதிய 1988/ 22 ஆம் இலக்க சுற்றறிக்கை | வீத வரி அறவிடுவதற்காக காணி மதிப்பீடு இறுதியாக 2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சுற்றிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | புதிய மதிப்பீட்டிற்காக விலை மதிப்பீட்டு திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2017 மார்ச் 17 ஆம் திகதிய மம/உமஆ/2016/3 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபையின் 19 கடைகளுக்கு 2014 ஆம் ஆண்டில் வருமானப் பரிசோதகரினால் மேற்கொண்ட மதிப்பீட்டிற்கு அமைய வாடகை அறவிட்டிருந்தது. | சுற்றிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | புதிய மதிப்பீட்டிற்காக விலை மதிப்பீட்டு திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,804,200 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ஏப்ரல் முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரை முடிவடைந்த 09 மாதங்களுக்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,308,425 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

**மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

2019 மார்ச் 20 இல் நிறுவப்பட்ட 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான சபையின் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,120,380 | 3,856,423 | 4,249,346 | 2,520,467 | மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | 1,857,520 | 765,847 | 2,838,865 |
| வாடகை | 8,391,810 | 4,916,238 | 5,182,790 | 204,713 | | 3,413,344 | 3,309,827 | 462,940 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 5,226,000 | 3,689,100 | 3,689,100 | - | | 4,128,251 | 4,128,251 | - |
| ஏனைய வருமானம் | 11,873,950 | 2,719,834 | 41,980,029 | 3,610 | | 1,763,194 | 1,496,608 | 680,679 |
| | 27,612,140 | 15,181,595 | 55,101,265 | 2,728,790 | | 11,162,309 | 9,700,533 | 3,982,484 |

**2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

**வாடகை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ஆண்டில் பட்டியலிடப்பட்ட வீதவரி , கடை வாடகை மற்றும் நீர் கட்டணங்கள் அறவிடுவதின் செயன் முன்னேற்றம் திருப்திகரமாக இருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தில் அநேகமானவை தற்போது அறவிடப்பட்டுள்ளது. |

**2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ரூபா 2,410,587 ஆன நீதிமன்றத் தண்டப்பணம் 9,204,306 மற்றும் ரூபா 1,506,000 ஆன காணி பரிமாற்றல் முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தது. | பெற வேண்டிய பணத்தை அறவிட்டுக்கொள் ள நடவடிக்கை எடுக்கப்படும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நொக்கங்கள் மற்றம் இலக்குகள் தொடர்பாக சபை அறிந்திராமல் இருந்ததுடன் மீளாய்வாண்டில் அது தொடர்பாக திட்டவட்டமான | எதிர்காலத்தில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்ற திட்டங்களைதயாரிப்பதற்கு | கருத்து தெரிவிக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| செயற்பாடுகள் எதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

**(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச மக்கள் மற்றும் வியாபாரிகளால் நுவரெலியா உடுபுஸ்ஸல்லாவ பிரதான வீதியில் கந்தபொல நகருக்கு அண்மையில் பள்ளமொன்றில் கழிவுகளை கொட்டியிருந்தமையால் சுற்றாடலுக்கு சுற்றுபுறத்திற்கு துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. | சுற்றாலுக்கு சேதமொன்று ஏற்படாத வண்ணம் கழிவுப்பொருட்களை முகாமை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக நுவரெலியாகந்தடிபொல கொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

**(அ) ஊழியர் பற்றாக்குறை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 14 பதவிகளில் 34 வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை . | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 10 தாபன மய பதவிகளக்காக ஆட்சேர்ப்பதற்கு உள்ளுராட்சி மன்றத்திட்ம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 24 வெற்றிடங்களுக்கு அரச சேவை ஆணைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும் |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 மே தொடக்கம் 2019 ஒக்தோபர் வரையான காலப்பகுதியில் தலைவரின் பிரயாணத்திற்காக ஒரு நாளைக்கு ரூபா 5000 வீதம் வழங்குதலின் அடிப்படையில் வாடகைக்குப் பெறப்பட்ட வாகனத்திற்கு ரூபா 2,730,000 செலுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் வாகன வாடகையாக மாதமொன்றிற்கு ரூபா 150,000 வரை செலவாவதுடன் அப்பணம் மாத தவணைகளாக செலுத்தப்பட்டு குத்தகை முறையின் கீழ் வாகனமொன்று வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால் அது மிக பயனுடையதாக இருந்திருப்பதுடன் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அமைச்சு இணங்கிய வாகனத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தலைவருக்காக ஒரு உத்தியோகபூர்வ வாகனம் இல்லாதிருப்பதால் பொது சபையின் தீர்மானத்தின் படி வாகன வாடகைப் பணத்தை செலுத்துவதுடன் உள்ளூராட்சி மன்ற அமைச்சினால் வாகனம் பெற்றுத் தரும்படி எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதன் படி சபை நிதியத்தில் வாகனமொன்றைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

.

### 3.4 பெறுகை

#### ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2018 ஆம் ஆண்டின் சபை நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கந்தபொல கொண்கொடியாதெனிய விளையாட்டு மைதானத்தில் நிர்மாண வேலைகளின் போது மண் கொண்டு சென்று அகற்றுவதற்காக ரூபா 138,240 வழங்கப்பட்டு இருந்தும் மண் கொண்டு செல்லப்படவில்லை | கூடுதலான கொப்பனவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தலைவரின் ஆலோசணையின் பிரகாரம் போக்குவரத்திற்காக ஒதுக்கீடு செய்த தொகையில் அப்பணத்தை தீர்வுசெய்யும் வகையில் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | கந்துரட்ட புதுக் கிராம உட்கட்டமைப்பு மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சின் 2018 ஆம் ஆண்டின் நிதி ஏற்பாட்டின் படி கந்தபொல பகுதி கரப்பந்தாட்ட மைதானத்தை சூழ வேலி கட்டுதல் மற்றும் விளக்கு வசதிகள் வழங்குவதன் கீழ் மைதானத்தை சூழ வேலி அடிப்பதில் பாதுகாப்பு வலைகள் 5 m உயரமாக கட்டப்பட வேண்டிய போதிலும் 27 m | நிர்ணயிக்கப்பட்ட தரத்தின் பிரகாரம் நிர்மாணிக்க வேண்டும். | திட்டமிடப்பட்ட அளவுக்கு வேலி கட்டும் படி ஒப்பந்தக்காரர்களுக்கு பல தடவைகள் அறிவுறுத்தப்பட்டு இருப்பதுடன் 14 நாட்களுக்குள் மேற்கூறப்பட்ட விடயம் பட்டியலில் குறிப்பிடப்பட்ட பெறுமானத்தின்படி மேற் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நீளத்திற்காக 2.5 m உயரமாகவும் 31 m நீளத்திற்காக 2.5 m உயரமாகவும் கட்டப்பட்டிருந்தது. | | |
| (இ) | (i) | 2019 ஆம் ஆண்டிற்கான மத்திய மாகாணத்திற்கு உரிய கட்டட நிர்மாணங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட விகிதத்தின் படி (B.C.R) மொத்த செலவு ரூபா 3 மில்லியன் எனக் காட்டப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தத்தின் படியான விகிதத்தை விட 3 மில்லியன் விஞ்சி ஒப்பந்தத்திற்கான விகிதம் குறைந்தாலும் சபை மூலம் முழு செலவு ரூபா 6,351,346 எனவும் நானுஓயா சபை கட்டட நிர்மாணம் தொடர்பான வேலை ரூபா 3 மில்லியனுக்கும் குறைந்த 4 பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒரே சுயாதீன அமைப்பிற்கு வழங்கப்பட்ட காரணத்தால் சபை நிதியத்திற்கு ரூபா 350,138 நட்டம் ஏற்பட்டுள்ளது. | இனிவரும் காலங்களில் கட்டட நிர்மாண வேலைகளின் போது இது போன்ற குறைபாடுகள் ஏற்படாது இருக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேவைக்கு ஏற்ற வகையில் பகுதியாக நிர்மாணப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. |
| | (ii) | ஒப்பந்தத்தை செயற்படுத்த சபையுடன் கைச்சாத்திட்ட சங்கங்கள் மூலம் வேறு ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு உப ஒப்பந்தம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதீப்படுத்தலுக்கு நடவடிக்கை எடுக்கப்பட வேணடும் | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ஈ) | (i) | 3 கட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட ருவன் எலிய சனசமூக மண்டப நிர்மாண பணியில் கட்டம் 2 இல் வேலை விடயம் 7 இன் கீழ் சுவருக்கு சாந்து பூசுதல், அடிப்பகுதியை சாந்திடல் மற்றும் தரைக்கு கொங்கிறீட் இடுதலுக்காக ரூபா 328,282 செலுத்தப்பட்டு இருப்பினும் கட்டம் 3 இல் வேலை இலக்கம் 7 இன் கீழ் அக் கட்டிடத்திற்காக ரூபா 345,484 மீண்டும் செலுத்தப்பட்டுள்ளது. | கூடுதலாக கொடுப்பனவினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii) மதிப்பீட்டின் படி தரைக்கு 75 mm தடிப்புடைய கொங்கிறீட் தளம் இடப்பட வேண்டி இருப்பினும் 50 mm தடிப்புடைய கொங்கிறீட் தளம் போடப்பட்டு இருப்பதனால் விரிவான மூட்டு போடப்படாத காரணத்தால் தரை வெடித்துக் காணப்பட்டது | மதிப்பீட்டின் பிரகாரம் உரிய தரத்தில் நிர்மாண வேலையை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவேண் கருத்து தெரிவிக்கவில்லை. |

**3.5 வெளிப்படையான முறைகேடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டிற்னகாக நானுஓய இறைச்சிக்கடை கேள்வி வழங்கும் போது பெறுகை நடைமுறைகளுக்கு புறம்பாக கூடிய கேள்வியை வழங்கிய கூறுவிலை நிராகரிக்கப்பட்ட காரணத்தினால் சபை நிதியத்திற்கு ரூபா 1,351,000 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது, | குறித்த நட்டம் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்க வில்லை. |
| (ஆ) | கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நுவரெலிய பிரதேச செயலகத்தினால் நிர்மாணிக்கப்பட்ட பொஸ்வுட் மேல் வீதிக்காக மேசடியாககேவையொன்றை தயாரித்துஉத்தியோகத்தர்களை ஏமாற்றி பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பொது மக்கள் பிரதிநிதியொருவரின் ஈடுபாட்டுடன் பேரில் ரூபா 1,481,349 தொகை சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. பின்னர் குறித்த பணம் அறவிடப்பட்டிருந்த போதும் பொறுப்பான தரப்பினர் இனங்காணப்பட்டு தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாகவிசாரித்து அறிக்கையிடுவதற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த பணத்தை தலைவரால் சபை நிதியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. |